# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 14/2021

Deposition of **P.W.-1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 28.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : Dr.வி.சந்திரசேகரன் Father's Name :வீரபத்திரன்

Calling : Age : 72

துவக்க நேரம் : 01.07 P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி** : நான் இவ்வழக்கில் வாதி. வாதி தரப்பு 1-ம் சாட்சி. எனது தரப்பில் கூடுதல் முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனது தரப்பில் ஏற்கனவே 1 முதல் 8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை கூடுதலாகக் குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | ஆவணம் | வகைப்பாடு | தன்மை |
|---|---|---|---|
| 1 | கடந்த 15.10.2020 தேதியிட்ட காந்தியம்மாள் என்பவரின் வாரிசு சான்று | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.9 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.14/2021, Dt.28.04.2026.

**<u>1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. எனது தந்தை வீரபத்திரனின் பூர்வீகம் எது என்றால் பெத்தநாயக்கன்பாளையம் ஆகும். எனது தந்தை அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவர் எந்த துறையில் பணிபுரிந்தார் என்றால் வேளாண்மைதுறையில் பணிபுரிந்தார். எனது தந்தை பணியின் காரணமாகத்தான் ஆத்தூருக்கு குடிவந்தார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு நடுவலூர் கிராமத்தில் ச.எண்.251/1-ல் ஏக்.2.94 செண்ட் நிலம் பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் 07.09.1959 இறந்தார். எனது தாயார் இறந்தபோது எனக்கும், எனது சகோதரருக்கும் என்ன வயது என்றால் எனக்கு 6 வயதும், எனது சகோதரர் 1-ம் பிரதிவாதிக்கு 7 வயது நிறைவடைந்தது.

2. எனது தாயார் இறந்தபோது நானும், எனது சகோதரரும் சிறுபிள்ளைகள் என்பதால்தான் எனது தகப்பனார் காந்தியம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தாயாரின் உடன்பிறந்த சகோதரி காந்தியம்மாள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரரான 1-ம் பிரதிவாதியும் சிறுபிள்ளைகளாக இருந்த காரணத்தால் எனது தாத்தாவும், மாமாவும் வற்புறுத்தியதன்பேரில் எனது தகப்பனார் காந்தியம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான்.

3. எனது தகப்பனார் காந்தியம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதற்கு காந்தியம்மாள் பெயருக்கு சொத்து வாங்கிதரவேண்டும் என்று எனது தாத்தாவும், மாமாவும் கேட்டுக்கொண்டார்கள் என்றால் அப்போது சிறுபிள்ளையாக இருந்ததால் அது பற்றி தெரியாது. மேற்கண்டவாறு காந்தியம்மாள் பெயருக்கு சொத்து வாங்கிதர கேட்டுக்கொண்டதன்பேரில்தான் எனது தகப்பனார் தெற்கு உடையார்பாளையத்தில் தாவா சொத்தை காந்தியம்மாள் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தகப்பனார் நடுவலூர் கிராமத்திலிருந்த தனது சொத்தை விற்றும், கையிருப்பு பணத்தை கொண்டும், கிரையம் வாங்கினார்

என்றால் சரிதான். காந்தியம்மாளுக்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான். அவருக்கு தனிப்பட்ட வருமானமோ, தாவா சொத்தை கிரையம் வாங்க தகுதியோ இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் அரசாங்க ஊழியர் என்றாலும் அவர் வருமானத்தில் தாவா சொத்தானது காந்தியம்மாள் பெயரில், பெயரளவில் மட்டுமே வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

4. காந்தியம்மாளுக்கு ஞானசேகர் என்பவர் மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். ஞானசேகரனுக்கும், அவரது மனைவியான 2-ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். கடந்த 18.08.2020 அன்று ஞானசேகரன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டுதான் காந்தியம்மாள் 22.08.2020 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி காந்தியம்மாளின் ஈமச்சடங்குகளை 1-ம் பிரதிவாதியின் மகன்தான் செய்தார் என்றால் சரிதான். அதேபோல் காந்தியம்மாளின் ஈமச்சடங்குகளை 1-ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனார் கிரயைம் வாங்கியபோது காலிமனை இருந்தது என்றாலும் அதன்பின்னிட்டு எனது தகப்பனார் வில்லை வீடு கட்டினார் என்றால் சரிதான். மேற்படி வில்லை வீட்டின் சுவற்றின்மீது கான்கீரிட் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி கான்கீரிட்டை நானும், எனது சகோதரர் காந்தி, ஞானசேகரனும் ஆகியோர்கள் சேர்ந்து கட்டினோம் என்றால் நான் அவ்வப்போது எனது தந்தைக்கு பணம் கொடுத்தேன் அதில்தான் கட்டினார்கள். காந்தியம்மாள் இறப்பதற்கு முன்பே, அவரது மகன் இறந்துவிட்டதால் காந்தியம்மாளின் சொத்தானது இரண்டாம்நிலை வாரிசுதாரர்களான எனக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் சேர வேண்டியது என்றால் சரிதான். காந்தியம்மாளின் மருமகள் அவருக்கு வாரிசாக வரமுடியாது என்றாலும் வருவாய்த்துறையினர் வழங்கிய தவறான வாரிசு சான்றிதழ் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.14/2021, Dt.28.04.2026.

6. வருவாய்த்துறையினர் வழங்கிய வாரிசு சான்றிதழ் தவறானது என்றாலும் அதனால் 1-ம் பிரதவாதி உரிமை பாதிக்கப்படுகிறது என்றாலும் சரிதான். இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்றாலும் அவ்வாறு அவசியமற்ற தரப்பினரை சேர்த்த காரணத்தால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1-ம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

<u>**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1. தாவா மற்றும் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் ஆகியவைகளில் உள்ள சங்கதிகள் நான் கூறியதன்பேரில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நானும், 1-ம் பிரதிவாதியும், இறந்துபோன வீரபத்திரனின் முதல் மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான். எங்கள் தாயார் பெயர் அங்கம்மாள் என்றால் சரிதான். ஞானசேகரன் என்பவர் எனது தந்தையின் 2-வது மனைவியின் மகன் என்றாலும் 2-வது மனைவியின் பெயரில் காந்தியம்மாள் என்றால் சரிதான். காந்தியம்மாளும், அங்கம்மாளும் சகோதரிகள் என்றால் சரிதான். எனது தாயார் இறந்தபின்னிட்டுதான் எனது தந்தை காந்தியம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதி இறந்துபோன ஞானசேகரனின் மனைவி என்றால் அவர் சட்டப்படியான மனைவி அல்ல. இருவரும் வெவ்வேறான மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் 2-ம் பிரதிவாதி சம்பிராதாயப்படி மட்டுமே மனைவி. ஞானசேகரனுக்கும், ராணி எலிசபத்திற்கும் கடந்த 30.08.1999 ம் ஆண்டு ஆத்தூர் APR சரஸ்வதி திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு நான் என் குடும்பத்தினருடன் கலந்து கொண்டேன் என்றால் சரிதான். இறந்துபோ ஞானசேரன் வழக்கறிஞர் என்பதால் அவரது திருமணத்திற்கு நீதிபதிகள் உட்பட அனைவரும் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.14/2021, Dt.28.04.2026.

3.	நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 6-வது பத்தியில் ஞானசேகரன் என்பவர் பிறப்பிலேயே கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த 2-ம் பிரதிவாதியான ராணி எலிசபெத் என்பவரை இந்து ஜாதிமுறைப்படி திருமணம் செய்து கொண்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் 2-ம் பிரதிவாதி திருமணத்திற்கு முன்பும், திருமணத்தின்போதும், திருமணத்திற்கு பின்பும் கிறிஸ்துவ மதத்தையே தழுவியுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்டவாறு நான் கூறியுள்ளது தவறு என்றாலும் 2-ம் பிரதிவாதி இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றாலும் இன்றுவரை இந்து மதத்தையே பின்பற்றி வருகிறார் என்றாலும் சரியல்ல.

4.	நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எந்த இடத்திலும் ஞானசேகரனுக்கும், ராணி எலிசபெத்திற்கும் திருமணம் நடந்த தேதியோ, இடத்தையோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். தாவாவில் வழக்குமூலத்தில் எந்த தேதியில் எந்த முறையில் நடந்தது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் தாவா பரிகாரத்தில் எந்த தேதயில் நடந்த திருமணத்தை செல்லாது என விளம்புகை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஞானசேகரனுக்கும், ராணி எலிசபெத்திற்கும் திருமணம் நடந்து தொடர்பான ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. எனது தம்பி மனைவியிடம்தான் உள்ளது.

5.	வா.த.சா.ஆ.4-ஆன 17.11.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2-ம் பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிலும் கடந்த 30.08.1999-ல் ஞானசேகரனுக்கும், ராணி எலிசபெத்திற்கும் திருமணம் நடைபெற்றது என்றும் அந்த திருமணம் செல்லாது என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன். மேற்படி அறிவிப்பிற்கு 2-ம் பிரதிவாதி பதில் அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் கடந்த 30.08.1990-ல் அவருக்கும் ஞானசேகரனுக்கும் APR சரஸ்வதி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றதாக குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2-ம் பிரதிவாதிக்கும், ஞானசேகரனுக்கும் எந்த தேதியில் எங்கு திருமணம் நடைபெற்றது என்ற விவரங்களை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்த போதிலும் மேற்படி சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி தாத்தா பெயர் சுப்ரமணியபிள்ளை என்றாலும் தகப்பனார் பெயர் ஆர். எஸ் மோகன் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் பின்னிட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் மனு தாக்கல் செய்தததில் 2-ம் பிரதிவாதியின் தந்தை பெயர் ஜோசப் மோகன்ராஜ் என தெரிந்து கொண்டேன். ஆனால் அவரது தாத்தா பெயர் தெரியாது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நான் தாக்கல் செய்த மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. ஞானசேகரனும், ராணி எலிசபெத்தும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் கிறிஸ்துவ திருமணம் சட்டம் அவர்களுக்கு பொருந்தாது என்றாலும் இவ்வழக்கிற்காக 2-ம் பிரதிவாதி கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆவணம் எதுவும் நீதமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ.8 -ஆன ஆவணத்துடன் தாக்கல் செய்துள்ள 2-ம் பிரதிவாதி தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் ஜெராக்ஸ் நகல் என்பதால் அந்த ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை வீரபத்திரனின், ஞானசேகரன் மற்றும் காந்தியம்மாள் ஆகியோர்களின் அசல் இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல, எனது சகோதரரான 1-ம் பிரதிவாதியிடம்தான் உள்ளது. மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும்போது தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறான ஆவணங்கள் இன்றி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், 1-ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்துதான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.14/2021, Dt.28.04.2026.

முடிவு நேரம்: 03.59 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.14/2021, Dt.28.04.2026.